2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை பொதுக் கணக்குக் குழுவினுடைய உறுப்பினராக இருந்த காரணத்தினாலே, இந்தக் கோரிக்கை குறித்து நான் எனது கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அங்கே இருந்த கட்டடங்கள் ஏறக்குறைய 140 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டிருந்த நிலையில், அவற்றைப் பயன்படுத்தக் கூடாது என்று பொதுப் பணித் துறையால் அறிவுறுத்தப்பட்டு, அதை மூடி வைத்திருந்தார்கள். அதை தற்போது இடித்துவிட்டு, கூடுதல் கட்டடம் கட்டித் தருவதோடு, அறுவை சிகிச்சை அரங்கமும் கட்டித் தர வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை வருங்காலத்தில் எடுத்துச் செய்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனை வளாகத்தில் 100 ஆண்டுகளுக்கு மேல், பழமைவாய்ந்த கட்டடம் ஒன்று இருக்கிறது. அந்தக் கட்டடத்தை இடிப்பதற்குப் பொதுப் பணித் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அக்கட்டடம் இடிக்கப்பட்ட பின்னர், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தேவையென்றால், உரிய கருத்துரு இணை இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்டு, தமிழக அரசின் நிதி இருப்பினைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவுடன் அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2012 ஏப்ரல் 23

149—

மாணவர் விடுதி

***6226—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்தங்கரை தொகுதியிலுள்ள கீழ்குப்பம் கிராமத்தில், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) கீழ்குப்பம் கிராமத்திலிருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஊத்தங்கரையில் ஒரு பள்ளி மாணவர் விடுதியும் மற்றும் ஒரு பள்ளி மாணவியர் விடுதியும் செயல்பட்டு வருகின்றன. அரசு விதிமுறைகளின்படி, விடுதிகளுக்கிடையே 8 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். எனவே, ஊத்தங்கரை தொகுதி, கீழ்குப்பம் கிராமத்தில் மாணவர் விடுதி அமைக்கும் சாத்தியக் கூறுகள் தற்சமயம் இல்லை. இருப்பினும், தேவையிருப்பின் நம்முடைய பொற்கால முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, தேவையான இடங்களில் விடுதிகள் கட்டித் தரப்படும் என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.*

2012 ஏப்ரல் 23]

திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசு பாலிடெக்னிக் கல்லூரியை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது கோடானுகோடி நன்றிகளை என்னுடைய சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழ்குப்பம் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 410 மாணவர்கள் படித்து வருகின்றார்கள். ஆகவே, அவர்களின் நலன் கருதி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுக்கு ஒரு விடுதி அமைத்துக் கொடுத்தால், அம்மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எனவே, அதை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி அமைந்தவுடன், கீழ்குப்பத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கல்லாவியில் ஒரு ஆதி திராவிடர் நலத் துறை மாணவர் விடுதியை ஆரம்பித்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு அதை எடுத்துச் சென்று, விடுதி ஆரம்பிக்க வேண்டிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*